பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 31 செவ்வாய்க்கிழமை 16.09.2025 | அதிர்வு 47

## மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக அருள்ராஜ் நியமனம்



(எஸ்.கீதபொன்கலன்)

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக திருகோணமலையைச் சேர்ந்த 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## மைத்திரியை சந்தித்துப் பேசிய சீனத் தூதுவர்

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, கொழும்பு, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். 02▶




# முடிந்தால் தேர்தலை நடத்திக் காட்டுங்கள்

## ஜே.வி.பிக்கு மொட்டுக் கட்சி சவால்

“கடந்த நல்லாட்சி காலத்தில் மாகாண சபைத் தேர்தல் மாயமாவதற்கு ஜே.வி.பியும் துணை நின்றது. இன்று ஜனநாயகம் பற்றி பாடமெடுக்கும் அந்தக் கட்சி முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதுதொடர்பில் ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,

“30 வருட கால போரை முடிவுக்குக் கொண்டு வந்த பிறகு வடக்கு, கிழக்கு மக்களுக்கு அவர்களுக்குரிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குரிய வாய்ப்பை மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக் கொடுத்தார். 04▶

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கோர விபத்து! திருமணம் செய்யத் தயாராக இருந்த பெண் சாவு!!



## வருங்கால கணவர் உட்பட எழுவர் படுகாயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இன்று இடம்பெற்ற விபத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கலனிகம மற்றும் கஹதுடுவ சந்திப்புகளுக்கு இடையில் இன்று அதிகாலை 8 பேரை ஏற்றிச் சென்ற வான் ஒன்று குளிர்சாதனப் பெட்டியுடன் கூடிய லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 32 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 7 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் நால்வர் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பெண் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் 02▶

# சாவகச்சேரி சபைகளில் 'சைக்கிள்' கட்சியின் வேட்புமனுக்கள் முற்றாக நிராகரிக்கப்படுமா?

## நீதிமன்றத் தீர்ப்பு இன்னமும் கிடைக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு




(பிரபாகரன் டிலக்சன்)

"அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபை வேட்புமனுக்களை சவாலுக்கு உட்படுத்தி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினுடைய தீர்ப்பு இன்னமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. நீதிமன்றத் தீர்ப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றதன் பிற்பாடு தேர்தல்கள் ஆணைக்குழு கூடி இது சம்பந்தமாக முடிவுகளை எடுக்கும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபை வேட்புமனுக்களைச் சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகியிருந்தது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நியமனப் பத்திரங்களைக் கையளிக்கும் போது குறித்த நபர்கள் அந்த எல்லைக்குள் வசிப்பவர்களா என்பதைத் தேர்தல் திணைக்களம் சட்ட திட்டங்களின் பிரகாரம் ஆராய்வதில்லை. சாவகச்சேரி பிரதேச சபை, நகர சபையினுடைய அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் வேட்புமனுக்கள் கையளிக்கப்படும் போது ஆட்சேபனைக்குரிய காலப் பகுதியில் எதுவித ஆட்சேபனைகளும் வெளிப்படுத்தப்படவில்லை. அந்த அடிப்படையிலேயே சாவேச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைக்கான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினுடைய தீர்ப்பு இன்னமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. நீதிமன்றத் தீர்ப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றதன் பிற்பாடு தேர்தல்கள் ஆணைக்குழு கூடி இது சம்பந்தமாக முடிவுகளை எடுக்கும்.

தனிப்பட்ட நபருடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டுவதால் அவர் சார்ந்த கட்சியினுடைய வேட்புமனு முற்றுமுழுதாக நிராகரிக்கப்படாது. ஆனால், ஒருவருடைய வேட்புமனு நிராகரிக்கப்படுவதால் பெண்கள், இளைஞர்களுக்கான ஒதுக்கீடுகள் அதில் பூர்த்தி செய்யப்படாமல் இருக்குமாக இருந்தால் அவற்றை நிராகரிக்க முடியும். எனவே, நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு கூடி சாவகச்சேரி நகர சபை, பிரதேச சபை தொடர்பில் முடிவெடுக்கும்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு தற்போது நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாக்கப்பட்டால் சட்ட திருத்தங்களின் பிரகாரம் அந்தச் சுயேச்சைக் குழு சார்பாக இரண்டாம் இடத்தில் முன்னிலையில் உள்ள வேட்பாளருக்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெளிப்படுத்தப்படும்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மட்டக்களப்பு...**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அலுவலர் ஜே.எஸ். அருள்ராஜ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் 27ஆம் திகதி தமது கடமையை உத்தியோகபூர்வமாக ஏற்கவுள்ளார்.

தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் செயலாளராகக் கடமை புரிந்து வரும் இவர் அதற்கு முன்னர் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றி இருந்தார்.

**தெற்கு அதிவேக...**

சிகிச்சை பெற்று வருகின்றார்.

காயமடைந்த மற்ற மூவரும் சிறுவர்கள் எனவும், அவர்கள் மூவரும் தற்போது களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

13, 11 மற்றும் 7 வயதுடைய மூன்று குழந்தைகள் இவ்வாறு காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண் வணிகத்துறையில் பணிபுரிந்து வருபவர் ஆவார்.

புஷ்பகுமாரி சந்தமாலி (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ள மேற்படி பெண், டிசம்பர் மாதம் திருமணம் செய்யத் தயாராக இருந்தார் என்று தெரிய வந்துள்ளது.

ஹோமாகம வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் பெண், வெளிநாட்டில் இருந்து தனது வருங்கால கணவரை அழைத்து வருவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த இளம் பெண் வானின் முன் இடது இருக்கையில் பயணித்தார் எனவும், அவர் திருமணம் செய்து கொள்ளவிருந்த இளைஞர் வானின் ஓட்டுநராக இருந்தார் எனவும், அவரும் விபத்தில் படுகாயமடைந்துள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் வான் கடுமையாக சேதமடைந்துள்ளது என்றும், லொறியின் பின்புற வலது பக்கம் சிறிய சேதத்தைச் சந்தித்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பாக லொறியின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வானின் ஓட்டுநர் நித்திரை கொண்டதால் இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

**மைத்திரியை...**

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை குறித்து இதன்போது கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு முன்பு, கொழும்பில் உள்ள சீனத் தூதுவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்திருந்தார் என்பதும்



# திலீபனின் இரண்டாம் நாள் நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தியாக தீபம் திலீபனின் இரண்டாம் நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ். நல்லூரில் நடைபெற்றது.

திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று இரண்டாம் நாள் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - நல்லூர் வீதியில் அமைந்துள்ள திலீபனின் நினைவாலயத்தில் இன்று காலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



















## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**முடிந்தால் தேர்தலை...**

தோல்வியெனத் தெரிந்தும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி, சபையை ஸ்தாபித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. என்பன இணைந்தே 2015 இல் நல்லாட்சியை உருவாக்கின. எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எழுச்சிக்கு அஞ்சி, மாகாண சபைத் தேர்தல் காணாமல் ஆக்கப்பட்டது. அரசுக்குரிய மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாதபோது அதற்கு ஜே.வி.பி. ஆதரவளித்தது.

அந்தவகையில் தேர்தலைப் பிற்போடும் சூழ்ச்சிக்கு ஜே.வி.பியும் துணை நின்றுள்ளது. இன்று ஜனநாயகம் பற்றி அந்தக் கட்சியினர் பாடம் எடுக்கின்றனர். முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும்.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொருளாதாரம் மீளுமா?

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு, அதல பாதாள நிலைக்கு வீழ்ச்சி அடைந்த இலங்கை, அதிலிருந்து மீண்டெழுவதற்கு முக்கி முனகி, பகீரதப் பிரயத்தனம் பண்ணினாலும், அதன் பொருளாதார அபிவிருத்திப் போக்குத் திருப்தி தருவதாக இல்லை என்பதுதான் உண்மை.

இப்போது, 2025ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.9 வீதம் வளர்ச்சி அடைந்துள்ளது என்றும், இது முந்திய இரண்டு காலாண்டுகளில் காணப்பட்ட சரிவுப் போக்கை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது என்றும் இலங்கைத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்துறை நேற்று மொத்த உள்நாட்டு உற்பத்தி இரண்டாவது காலாண்டில் 4.9 வீதம் வளர்ச்சிப் போக்கை எட்டியிருப்பதாக அறிவித்திருக்கிறது. இது, ஒரு வருடத்திற்கு முன்பு எட்டப்பட்ட 4.7 வீதத்துடன் ஒப்பிடும்போது சற்று அதிகமானதுதான். ஆனாலும் இலங்கை, தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கான விருத்தியாக இதனைக் கொள்ள முடியாது.

2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 5.5 வீத உச்சத்தை எட்டியதிலிருந்து, 2024 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் 5.4 வீதமாகவும், 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.8 வீதமாகவும் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி அடைந்திருக்கின்றது.

2022 இல் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்த இலங்கை, அதனால் வெளிநாட்டுக் கடன் நிலுவைகளை மீளச் செலுத்த முடியாத - கடனிறுக்க வழியற்ற - நாடாக அறிவிக்கப்பட்டது. ஆயினும், அந்தச் சமயத்தில் நெருக்கடிக்கு மத்தியில் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஒத்துழைப்பைப் பெற்று நாடு பொருளாதார நெருக்குவாரத்துக்கு மத்தியில் மூச்சு விடுவதற்கு ஓர் அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

அதன்படி கடன் கொடுத்த நாடுகளும் தரப்புக்களும் கடன் தவணைப் பணத்தை பெறுவதை 2028 வரை இடைநிறுத்தி வைக்க ஒப்புக் கொண்டிருக்கின்றன.

2028 இலிருந்து இலங்கை தன் கடன் தவணை கொடுப்பனவுகளை மீண்டும் செலுத்தத் தொடங்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து, மொத்த உற்பத்தி பெருக்கமுற்று, அது ஆறு வீதத்துக்கு அதிகமாக இருந்தால் மாத்திரமே கடன் மீளக் கெடுத்தக்கூடிய அடிப்படைத் தகைமை நிலையை இலங்கை எட்டும் எனக் கூறப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசும், அதன் ஜனாதிபதியும் கடந்த ஆண்டில் ஆட்சி அதிகாரப் பொறுப்பை ஏற்ற பின்னர் நாட்டின் மொத்த உற்பத்தி வீதம் குறிப்பிடத்தக்க அளவு உயரவில்லை என்பது பலரையும் அதிருப்தி கொள்ள வைத்த விடயம். ஆயினும் இந்தக் காலாண்டி இப்போது, நாட்டின் மொத்த உற்பத்தி சதவீதத்தில் சற்று மேம்பாடு காணப்படுகிறது.

ஆயினும் 2028 இல் வெளிநாட்டுக் கடன்களை இலங்கை மீளச் செலுத்தும் போது எதிர்கொள்ளப் போகின்ற பொருளாதார நெருக்கடியை சமாளிக்கத்தக்க வகையில் இலங்கை இன்னும் தன் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்தவில்லை என்பதுதான் யதார்த்த நிலைமையாகும்.

பெற்ற கடனை மீளச் செலுத்தாமல், இருக்கின்ற வளங்களை வைத்து தற்காலிகமாக நாட்டை ஓட்டிச் செல்வது என்பது கடன் வாங்கிக் கல்யாணம் என்ற நிலைமையை ஒத்தது.

இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைந்து நாடு மீளுவதற்கு ஜனாதிபதியும் அவரது தேசிய மக்கள் சக்தி அரசுத் தரப்பினரும் என்ன பொருளாதாரத் திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெளிவான விடை தெரியாத கேள்வி ஆகும்.



# உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி நகர சபையில் ஆரம்பம்

சாவகச்சேரி நகர சபையின் இவ்வருட உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வு நேற்று (15) தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில மீசாலை கிழக்கு வட்டாரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மீசாலை கிழக்கு வட்டாரத்தில் ஆதன வரி அறவீடு தொடர்பான நடமாடும் சேவை இடம்பெற்றது.

இன்று (16) நகரசபையின் மயானங்கள் மற்றும் கோயிற்குடியிருப்பு கடற்கரை ஆகியவற்றில் மரக்கன்றுகள் நடுகை இடம்பெற்றது. நாளை (17) இலவச மருத்துவ முகாம், டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை, போதைப் பொருள் பாவனை ஒழிப்பு துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல் இடம்பெறும்.

18ஆம் திகதி ஆதனவரி அறவீட்டின் நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வு ஒலிபெருக்கி அறிவிப்பு, 19ஆம் திகதி சபை எல்லைக்கு உட்பட்ட முன்பள்ளி சிறார்கள் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கையாக சாவகச்சேரி பொது நூலகத்தில் கணினி, கலை, இலக்கியப் போட்டிகள் இடம்பெறும்.

20 ஆம் திகதி சபையின் வட்டாரங்களில் வீதி விளக்குப் பொருத்துதல் 21 ஆம் திகதி நகரசபை பொன்விழா மண்டபத்தில் சமூக விழிப்புணர்வு குறும்படம் மற்றும் போட்டிகளில் பங்குபற்றிய சிறார்கள் மற்றும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படும் என்று தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

அத்துடன் சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்கு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் ஒத்துழைக்குமாறும் கேட்டுள்ளார்.







# வேலணை நீர் வள முகாமைத்துவம் தொடர்பாக நேற்றுக் கலந்துரையாடல்



வேலணைப் பிரதேச நீர் வள முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (15) பிரதேச செயலாளர் த.அகிலன் தலைமையில் சிறிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சாட்டி மண்கும்பான் பிரதேசத்தில் காணப்படும் கிணறுகளில் அளவுக்கு அதிகமாக அகத்து உறிஞ்சல் காரணமாக நிலத்தடி நீர் பாதிப்படைதல் தொடர்பாகவும், மக்களுக்கான குடி தண்ணீர் வழங்கல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலில் வேலணை பிரதேச சபை தவிசாளர், நீர் வளச் சபை பிராந்திய முகாமையாளர், பொலிஸ் பொறுப்பதிகாரி, ஊர்காவற்றுறை, வேலணை, சாட்டி, மண்கும்பான் பிரதேச நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள், சாட்டி புனித சித்தா திரை மாதா திருத்தல பங்குதந்தை, சர்வோதயம் புங்குடுதீவு அறங்காவலர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# அடுத்துவரும் மாதங்களில் ஏற்படவுள்ள இயற்கை அனர்த்தம் தொடர்பில் ஆராய்வு

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அடுத்துவரும் மாதங்களில் ஏற்படவுள்ள இயற்கை அனர்த்தங்கள் தொடர்பிலும் முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பிலுமான கலந்துரையாடல் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் இ. த ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இதில் கலந்து கொண்டார்.

பச்சிலைப்பள்ளியின் அனர்த்த நிலைமைகள் தொடர்பாகவும், எதிர்வரும் மழை காலத்தை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் மற்றும் அனர்த்த நிலைமையின் போது வழங்க வேண்டிய உதவிப் பொருள்களின் ஆயத்த நிலை குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் , மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மீசாலை பொது நூலகத்தின் போட்டிகள்

மீசாலை பொது நூலகத்தினர் இவ் வருட தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திறந்த கட்டுரைப் போட்டிகளை வாசகர்களிடையே நடத்தவுள்ளனர்.

கீழ்க்காணும் தலைப்புகளில் கட்டுரைகளை ஒக்ரோபர் 6 ஆம் திகதிக்கு முன்னர் நூலகர், பொது நூலகம், மீசாலை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளனர்.

மறுமலர்ச்சிக்காகவாசிப்போம்,போதையில்லாத தேசத்தை கட்டியெழுப்புவோம், தற்போது அதிகரித்து வரும் காலநிலை மாற்றங்களும் இதனால் இன்று உலக நாடுகள் எதிர்நோக்கும் சவால்களும் இதற்கு நீர் கூறும் தீர்வுகளும், சமூகத்தில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்போம் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு நூலகர் அறிவித்துள்ளார்.

மீசாலை பொது நூலக எல்லைக்குள் வீடுகளில் நூலகம் வைத்து பயன்படுத்துபவர்களுக்கு இவ்வருட தேசிய வாசிப்பு மாத இறுதியில் நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

வீட்டு நூலகத்தில் 100 இற்கும் மேற்பட்ட நூல்களை வைத்துப் பராமரிப்பவர்கள் நூலக அபிவிருத்திக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்கப் படவுள்ளனர்.

வீட்டில் அலுமாரியில் அல்லது புத்தக விறாக்கையில் நூல்களை வைத்துப் பராமரித்து வருபவர்கள் ஒக்ரோபர் 5 ஆம் திகதிக்கு முன்னர் நூலகத்தில் பதிவு செய்யுமாறும் நூலக அபிவிருத்தி குழு நேரடியாக வீட்டு நூலகத்தை பார்வையிடும் எனவும் சிறந்த வீட்டு நூலக பராமரிப்பாளர் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்கப்படவுள்ளார் எனவும் நூலகர் அறிவித்துள்ளார்.

# தோழரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணி தெரிவிப்பு

(பழுவூரான்)

ஈழப்புரட்சி அமைப்பின் மூத்த உறுப்பினரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான தோழர் குமாரசாமி நாகேஸ்வரன் தன் இன்னுயிரை அகாலமாய் இழந்த செய்தியால் நாம் பெரும் துயர் அடைந்துள்ளோம் என ஈரோஸ் ஜனநாயக முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வூடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சேனையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் குமாரசாமி நாகேஸ்வரன் தான் சார்ந்த, தன் இனம் சார்ந்த பற்றுதலும், அக்கறை கொள்ளும் குணமும் மிக அதிகமாகவே இளம் வயது முதலில் இயல்பாக அவரிடம் இருந்தது.



அதன் பிரதிபலிப்பு 1970 காலத்திலேயே அவர் அரசியலில் தன்னை இணைத்துக் கொள்ள காரணமானது. பல அரசியல் அமைப்புகளிலும் அவரது பங்களிப்பு மிகவும் காத்திரமாய் அமைந்தது.

1978 ஆம் ஆண்டளவில் ஈரோஸ் அமைப்புடன் தன்னை இணைத்து முன்னணி தோழராக செயல்பட்டிருந்த வேளை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறை சென்று சிறைவாசம் அனுபவித்தவர்.

விடுதலையான போதிலும் தன்னை மக்கள் தொண்டுக்காய் அர்ப்பணித்து செயற்பட்டதன் விளைவாக 2015 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்டு மக்கள் தொண்டாற்றினார். தோழரின் இன்னுயிர் இழப்பால் துயரடைந்துள்ள அவரின் குடும்ப உறவுகளுடன் இணைந்து நாமும் எமது துயரைப் பகிர்ந்து கொள்கிறோம்.- என்றுள்ளது.





# தலைவர் அஸ்ரப்பின் அலுவலகத்தில் அவரது நினைவு நிகழ்வுகள் இன்று!

(நூருல் ஹுதா உமர், சர்ஜூன் லாபீர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் 25 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு தலைவர் தினம் நினைவுப் பேருரையும், கத்தமுல் குர்ஆனும், துஆப் பிரார்த்தனையும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் தலைமையில் கல்முனை அலுவலகத்தில் இன்று (16) செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிபர் எம்.ஜே.எம். அன்வர் நௌஷாத் சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்தநிகழ்வில்உலமாக்கள், ஹாபிழ்கள், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ஏ.ஏ. பஷீர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மறைந்த தலைவரின் மறுமை வாழ்வின் ஈடேற்றத்துக்காக விசேட துஆப் பிரார்த்தனை செய்தனர்.

எச்.எம்.எம்.ஹரீஸின் கல்முனை அலுவலகம் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் காலத்திலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை பிராந்திய அலுவலகமாக இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.



# முல்லைக் கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில்: மீனவர்கள் முறையீடு; ரவிகரன் எம்.பி.களத்தில்!




(பா.சதீசன்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அத்து மீறிய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையீடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளின் முறைப்பாட்டையடுத்து நேற்று (15) இரவு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உடனடியாக கடற்றொழிலாளர்களுடன் கடலுக்குள் சென்று முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதை நேரடியாக பார்வையிட்டார். அவ்வாறு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடும் பலரையும் கடுமையாக எச்சரித்தார்.

குறிப்பாக கொக்கிளாய் முகத்துவாரம் மற்றும் நாயாறு உள்ளிட்ட பகுதிகளில் அத்துமீறித் தங்கியுள்ள நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் மீனவர்களாலும், திருகோணமலைப் பகுதி மீனவர்களாலுமே இவ்வாறு மிக அதிகளவில் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் மற்றும் சுருக்கு வலை உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடலில் இருந்து பார்வையிடும் கரையில்தெரியும் வெளிச்சத்தைவிடவும் சட்டவிரோத வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் படகுகளின் வெளிச்சம் அதிகமாக தென்படுகின்றது.

அந்தளவுக்கு மிக அதிகளவில் சட்டவிரோத வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் நிலமைகளை வன்னிமாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு நேரடியாகக் காண்பித்த முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், இவ்வாறான அதிகரித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் முல்லைத்தீவில் சட்டத்துக்கு உட்பட்டு கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களால் கடற்றொழிலில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்தச் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கு எதிராக நாடாளுமன்றிலும், கடற்றொழில் அமைச்சின் ஆலோசனை குழுக் கூட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், கடற்றொழிலாளர் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் தொடர்சியாகக் குரல் எழுப்பிவருவதை இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

நேரடி களவிஜயத்தின்போது சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெறுவதை ஆதாரப்படுத்தும் வகையில் சேகரிக்கப்பட்ட விடயங்களை உரிய இடங்களுக்கு கொண்டுசென்று இந்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்துவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு விளையாட்டுத்துறையின் பணிப்பாளராக அஸீம் நியமனம்!

(அஸ்லம் எஸ். மௌலானா)

கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை பணிப்பாளராக இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான ஏ.எஸ்.எம். அஸீம், மாகாண ஆளுநர் பேராசிரியர் நந்த லால் ரத்னசேகரவால் நியமிக்கப்பட்டுள ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் நேற்று திங்கட்கிழமை (15) திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து, ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டது. இதையடுத்து அவர் தனது கடமைகளை நேற்றுப் பிற்பகல் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளராக கடமையாற்றி வந்த நிலையில் அவருக்கு இந்தப் பதவியுயர்வு



கிடைக்கப் பெற்றுள்ளது.

2019 ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட ஏ.எஸ்.எம்.அஸீம், 2020 மார்ச் மாதம் தொடக்கம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளராகவும் அதனைத் தொடர்ந்து 2022 ஜனவரி முதல் கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார். இதன்போது சிறிது காலம் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார். இவர் மருதமுனையை சேர்ந்த அஹமட் சிராஜுதீன் மற்றும் ஜஹ்புல் அறபியா தம்பதியரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆஸ்திரேலிய ‘தாயகம்’ வானொலியின் உதவித்திட்டம் மல்லாவியில் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியில் ஆஸ்திரேலியாவில் இருந்து 24 மணி நேரம் ஒலிபரப்பாகும் தாயகம் தமிழ் ஒலிபரப்புச் சேவை வானொலி ‘ஒன்றாய் இணைவோம்’ திட்டத்தின் ஊடாக மாணவர்களுக்கு பாடசாலை பைகளை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு மல்லாவி, சேராங்கண்டல் பிரதேசத்தில் உள்ள மங்கைநகர் பகுதியில் கடந்த சனிக்கிழமை (13) இடம் பெற்றது.

25 பாடசாலை மாணவர்களுக்கு பைகள் வழங்கப்பட்ட நிகழ்வில் அப்பகுதியில் உள்ள சமூக செயற்பாட்டாளர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து வானொலி சார்பாக பொருள்களை எடுத்துச் சென்ற சமூக செயற்பாட்டாளர்களும் பங்கேற்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கான பைகள் அப்பகுதியில் உள்ள சமூக செயற்பாட்டாளர்கள் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து தாயகம் வானொலியின் இயக்குநர் விஜய் இராஜ கோபால் வானொலியின் சார்பாக பாடசாலை பைகளுக்கான நிதியுதவியை வழங்கினார்.

தென்மராட்சி பகுதியில் கடந்த வருடம் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொருள்களையும் தாயகம் தமிழ் வானொலி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# மன்னாரில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான மாட்டுவண்டி சவாரி!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களின் ஒன்றான இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை (14) மாலை நானாட்டான் வாழ்க்கை பெற்றான் கண்டல் இரட்டை மாட்டு வண்டி சவாரி திடலில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மாட்டு வண்டி சவாரி சங்க தலைவர் சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த போட்டியில், பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளின் தவிசாளர்கள் கலந்து கொண்டனர்.

போட்டியில் வடமாகாணத்தில் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த காளைகள் போட்டியில் கலந்து கொண்டிருந்தன. போட்டிக்கு நூறு கோடிக்கும் மேற்பட்ட காளைகள் அழைத்து வரப்பட்டிருந்தன.

மிகவும் சிறப்பாக இடம்பெற்ற போட்டியில், ஏ,பி பிரிவுகளில் கிளிநொச்சி மாவட்ட காளைகளும், சி, டி, ஈ ஆகிய பிரிவுகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காளைகளும் வெற்றியீட்டின.

போட்டியில் வெற்றிபெற்ற காளைகளின் வெற்றியாளர்களுக்குப் பெறுமதியான பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.










# அ.தி.மு.க. ஆட்சியை காப்பாற்றியது மத்திய பா.ஜ.க. அரசாங்கம் தான்

## பழனிசாமி தகவல்



அ.தி.மு.க. ஆட்சியை காப்பாற்றியது மத்திய பா.ஜ.க. அரசுதான் எனவும் அதற்கு நன்றியுடன் இருக்கிறோம் என்றும் அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. சார்பில் அண்ணாவின் 117 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், வடபழனியில் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி பங்கேற்று ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

“2011 முதல் 2021 வரையிலான அ.தி.மு.க. ஆட்சி, பொற்கால ஆட்சி. இதில் 17 அரசு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டன. தி.மு.கவின் 4 ஆண்டு ஆட்சியில் 1 மருத்துவக் கல்லூரியைக் கூட கொண்டுவரவில்லை. தி.மு.க. ஆட்சியில் மக்களுக்கும், காவலர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. இந்த ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. யாருக்கும் பாதுகாப்பு இல்லை. 6 காவலர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஏழைகளின் வறுமையை பயன்படுத்தி சிறுநீரகத்தை திருடுகின்றனர்.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், திருமண உதவி திட்டம், அம்மா இருசக்கர வாகன திட்டம், மடிக்கணினி திட்டம் ஆகியவை மீண்டும் செயல்படுத்தப்படும். இன்றைக்கு சிலர் அ.தி.மு.கவை அழிக்கப் பார்க்கிறார்கள். அ.தி.மு.கவை எவராலும் ஒன்றும் செய்ய முடியாது. எங்களுக்கு ஆட்சி அதிகாரத்தைவிட தன்மானம் தான் முக்கியம். அதை இம்மியளவும் விட்டுக் கொடுக்க மாட்டேன்.

அதிமுக ஆட்சியை கவிழ்க்க வாக்களித்தவர்களையும் மன்னித்து துணை முதல்வர் பதவி கொடுத்தோம். அவர்கள்தான் அ.தி.மு.கவினரின் கோயிலான எம்.ஜி.ஆர். மாளிகையை தாக்கினர். இவர்களை எல்லாம் கட்சியில் சேர்க்க வேண்டுமா? நான் எதற்கும் அஞ்ச மாட்டேன். யாரும் என்னை மிரட்டிப் பார்க்க முடியாது.

சிலர் அதிமுகவை கபளீகரம் செய்து ஆட்சியை கைப்பற்றப் பார்த்தார்கள். அப்போது ஆட்சியை காப்பாற்றிக் கொடுத்தது மத்திய ஆட்சியில் இருக்கும் பா.ஜ.கதான். அவர்களுக்கு நன்றியோடு இருக்கிறோம். கூட்டணி சேருவது என்பது, கட்சி ஆட்சிக்கு வர வேண்டும். எதிரிகளை வீழ்த்த வேண்டும் என்ற அடிப்படையில் தான். அ.தி.மு.கவை காப்பாற்ற அனைவரும் துணிந்து நிற்க வேண்டும். அ.தி.மு.கவுக்கு எவர் துரோகம் செய்தாலும் நடுரோட்டில் நிற்பார்கள், விலாசம் இல்லாமல் போய்விடுவார்கள்.” என்றார்.

# பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் 2,000 ரூபா வழங்கும் திட்டம்




பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் 2,000 ரூபா உதவித் தொகை வழங்கும் ‘அன்புக் கரங்கள்’ திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். ‘அரசியலில் சொகுசுக்கு இடமில்லை. ஆட்சி பொறுப்பை பயன்படுத்தி சமூக மாற்றங்களை செய்து வருகிறோம்’ என்று அவர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

பெற்றோரை இழந்த குழந்தைகள் 18 வயது வரையிலான பாடசாலை படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இல்லாமல் கல்வியை தொடர, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் அவர்களுக்கு மாதம் தோறும் 2,000 ரூபா உதவித்தொகை வழங்கும் ‘அன்புக் கரங்கள்’ திட்டத்தின் தொடக்க விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

இந்த திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். விழாவில் அவர் உரையாற்றுகையில்,

“இந்திய சமூகச் சூழலில், இவர்களுக்கெல்லாம் எதுவுமே தெரியாது, தெரியக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களின் எழுச்சிதான் திராவிட இயக்கம். அதனால்தான், மக்களோடு மக்களாக மக்களுடைய குரலாக தி.மு.க. இன்று ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மக்களுடைய தேவைகளை, சமூகத்துக்கு தேவையான மாற்றங்களை, ஆட்சிப் பொறுப்பை பயன்படுத்தி நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அரசியல் என்பது மக்கள் பணி. அது கடுமையான பணி. எங்களை பொருத்தவரை, இங்கு சொகுசுக்கு இடமில்லை. அரசியல் என்றால் ஏதோ ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம், பொறுப்பை மறந்து பதவி மோகத்தில் இருந்தோம், சில கவர்ச்சித் திட்டங்களை செய்தோம், மறுபடியும் பதவி மோகத்தோடு தேர்த லுக்கு தயாராவோம் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால், எங்களுடைய அடிப்படையே பதவி அல்ல; பொறுப்புதான். அதிகாரம் என்பது சாமானியனுக்காக போராடுவது.

பாடசாலைக்கு பசியுடன் வரும் குழந்தைகளுக்காக காலை உணவு திட்டத்தை உருவாக்கினேன். இப்போது 21 லட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் சூடாக, சுவையாக சத்தான உணவை பரிமாறுகிறோம். இவற்றை எல்லாம் வாக்கு அரசியலுக்காக செய்யவில்லை. வாக்கு என்பது, மக்களின் நம்பிக்கையை பெற்றதற்கான அடையாளம். அந்த நம்பிக்கையை பெறும் கொள்கை, செயல்திட்டம், உழைப்பு எங்களிடம் உள்ளன.

‘தாயுமானவர்’ திட்டத்தின் ஒரு பகுதியாக, தற்போது ‘அன்புக் கரங்கள்’ திட்டத்தை தொடங்கி வைத்திருக்கிறோம். இத்திட்டத்தின்கீழ் 6,082 குழந்தைகளுக்கு மாதம்தோறும் 2,000 ரூபா வழங்கப்படும்.

பெற்றோரே இல்லாத குழந்தைகளையும், தாய் அல்லது தந்தை மட்டும் இருக்கின்ற குழந்தைகளையும் பார்த்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணத்தின் அடிப்படையில் உருவானதுதான், ‘அன்புக் கரங்கள்’ திட்டம். முதல்கட்டமாக கண்டறியப்பட்டுள்ள 6,082 குழந்தைகளுக்கு பள்ளிப் படிப்பு உட்பட 18 வயது வரை கல்வியை தொடர இந்த உதவித் தொகை, அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். பின்னர், அவர்களுக்கு கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். என்றார்.



# ட்ரம்பின் நண்பர் கொலைச் சம்பவம்; மரபணுவால் சிக்கினார் கொலையாளி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நண்பரான சார்லி கிர்க்கைக் கொல்லப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கியைச் சுற்றி சுற்றப்பட்டிருந்த துண்டில் இருந்த மரபணு, காவலில் உள்ள சந்தேக நபருடன் பொருந்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் புலனாய்வுத்துறையின் பணிப்பாளர் இதனை உறுதி செய்துள்ளார்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட டைலர் ரொபின்சனுக்கு எதிராக இந்த வாரத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த புதன்கிழமையன்று இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கட்டார் தாக்குதலைப் போன்று இனியும் தாக்குதல் நடத்தப்படும்

## நெதன்யாகு எச்சரிக்கை



ஹமாஸ் தலைவர்கள் உலகின் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோவுடன் ஜெருசலேமில் நடைபெற்ற கூட்டு ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் எல்லைகளுக்கு அப்பால் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான உரிமை உண்டு என நெதன்யாகு சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்து கட்டாரில் நடத்திய தாக்குதலைப் போன்று, இனியும் தாக்குதல் நடத்தப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

மேலும், கட்டாரில் ஹமாஸ் தரப்பினரை குறிவைத்து நடத்திய தாக்குதல், சர்வதேச அளவில் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதில் அமெரிக்க ஜனாதிபதியும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த தாக்குலுக்கும் அமெரிக்காவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும், இந்த விவகாரத்தில் தாம் தன்னிச்சையாகவே செயற்பட்டதாக பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

# நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல் கடற்படையினரிடம் ஒப்படைப்பு



ஆழமற்ற கடற்பகுதியில் இயங்கும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல்களை கொல்கத்தாவின் 'கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்டு இன்ஜினீயர்ஸ்' நிறுவனம் கட்டி வருகிறது.

இதில் முதலாவது போர்க் கப்பலான 'அர்லானா' கடந்த ஜூன் மாதம் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது. இதையடுத்து இரண்டாவது போர்க் கப்பலை (ஆந்த்ராத்) இந்திய கடற்படையிடம் அந்த நிறுவனம் கடந்த சனிக்கிழமை ஒப்படைத்தது.

லட்சதீவு தீவுக்கூட்டத்தில் உள்ள ஆந்த்ராத் தீவிலிருந்து இதற்கான பெயர் பெறப்பட்டுள்ளது. சுமார் 77 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பல்கள், டீசல் இன்ஜின்-வாட்டர்ஜெட் கலவையால் இயக்கப்படும் மிகப்பெரிய இந்திய கடற்படை போர்க் கப்பல்களாகும்.



# நேபாள சுற்றுலாத் துறைக்கு போராட்டங்களால் பேரழிவு

நேபாளத்தில் நிலவிய போராட்டங்கள் காரணமாக அந்நாட்டு சுற்றுலாத் துறை கடுமையான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 30 வீதம் குறைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை 30 வீதம் குறைந்துள்ளதாகவும், சில சுற்றுலா முன்பதிவுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்றும் நேபாள சுற்றுலா சபை மற்றும் விருந்தகங்கள் உரிமையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

காத்மண்டுவில் பரபரப்பான சுற்றுலா மையங்கள், கடைகள் மற்றும் உணவகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காத்மண்டுவின் பரபரப்பான சுற்றுலா மையமான தாமெல் போன்ற இடங்கள் எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு மீண்டும் திறக்கப்பட்ட பிறகும், பெரும்பாலும் வெறிச்சோடி காணப்பட்டன.

நேபாளத்துக்கு ஆண்டுதோறும் 1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைப் பெறுகிறது, மேலும் இந்தத் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 8 வீதம் பங்களிக்கிறது.

செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான காலம் உயர் சுற்றுலாப் பருவமாகக் கருதப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை வழக்கத்தை விட 30 வீதம் குறைந்துள்ளதாகவும், கடந்த சில நாள்களில் இரத்து வீதம் 8 தொடக்கம் 10 வீதமாக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 16/09/2025

**பொலிஸாரால் தேடப்படுகிறார் கனடா வாழ் தமிழ் இளைஞன்**



02



# அரச பணியாளர்கள் குறைப்பு; பிரதமர் மார்க் கார்னி விளக்கம்

**அரச பணியாளர்கள் எண்ணிக்கை குறையக்கூடும் என்ற அச்சங்கள் நிலவும் நிலையில், பிரதமர் மார்க் கார்னி, பணியாளர் குறைப்புகள் இயல்பான பணியாளர் வெளியேற்றம் மூலம் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.**

**பணியாளர் எண்ணிக்கை குறைப்பது என்பது செயற்கையாக நடைபெறாது என தெரிவித்துள்ளார்.**

**வயது, ஓய்வு, தனியார் துறையில் புதிய வேலை வாய்ப்புகள் போன்ற காரணங்களால் இயல்பாக பணியாளர்கள் வெளியேறுவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.**

அந்த இயல்பான செயல்முறையால் அரசு அளவை நிர்வகம் செய்யும் என அவர் தெரிவித்துள்ளார்.

லிபரல் கட்சியின் தேர்தல் வாக்குறுதியில், கூட்டாட்சி பொது சேவையில் பணியாளர் எண்ணிக்கையை குறைக்காமல் கட்டுப்படுத்துவோம் என்று தெரிவித்திருந்தது.

கார்னி அதே நிலைப்பாட்டைத் தொடர்வதாகவும், சேவைகள் குறையாமல் அரசு செலவுகளை கட்டுப்படுத்துவோம் என குறிப்பிட்டுள்ளார்.

2015 முதல் 2025 வரை அரசு பணியாளர் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு மேல் உயர்ந்து, தற்போது 357,965 பணியாளர்களாக உள்ளது. ஆனால் கடந்த ஆண்டு ஒப்பிடும்போது சுமார் 10,000 பணியாளர்கள் குறைந்துள்ளனர்.

# கனடாவில் வேலை வாய்ப்பு மோசடி: 3 லட்ச ரூபாயை இழந்தார் இந்தியர்

கனடாவில் வேலை வாங்கித்தருவதாக இந்தியர் ஒருவரை ஏமாற்றிய மூன்று பேர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் கேரளாவிலுள்ள திருவனந்தபுரத்தைச் சேர்ந்த 47 வயது நபர் ஒருவர், சமூக ஊடகம் ஒன்றில் கனடாவில் வேலை குறித்து விளம்பரம் செய்யப்பட்டுள்ளதைக் கண்டு சம்பந்தப்பட்ட நபர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ளார்.

அவர்கள் அவரை தங்கள் அலுவலகத்திற்கு வரச் சொல்ல அங்கு சென்ற அவரை மூன்று மாதங்களில் கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறியுள்ளார்கள், அது தொடர்பான ஆவணங்களில் இருதரப்பினரும் கையெழுத்திட்டுள்ளார்கள்.



அந்த நபர் தனது வங்கிக்கணக்கிலிருந்து அவர்களுக்கு இந்திய மதிப்பில் 3 லட்ச ரூபா அனுப்பியுள்ளார்.

ஆனால், பணம் கொடுத்து பல மாதங்களாகியும் தன்னை அவர்கள் கனடாவுக்கு அனுப்பாததால் தனது பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அவர்கள் அவருக்கு காசோலை ஒன்றைக் கொடுத்துள்ளார்கள். ஆனால், அது 'பவுன்ஸ்' ஆகியுள்ளது.

ஆகவே, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவர் பொலிஸில் புகார் செய்துள்ளார். பொலிஸார் சம்பந்தப்பட்ட நபர்கள் மூன்று பேர் மீது மோசடி வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுவருகிறார்கள்.






# பொலிஸாரால் தேடப்படுகிறார் கனடா வாழ் தமிழ் இளைஞன்

கனடாவில் கடந்த மாதம் பிக்கரிங் நகரில் துப்பாக்கி சூடு நடத்திய தமிழ் இளைஞன் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர். ஒன்டாரியோ பிராட்போர்ட் பகுதியை சேர்ந்த 33 வயதான மகிபன் பேரின்பநாதன் என்ற இளைஞனே தேடப்பட்டு வருகிறார்.

கடந்த மாதம் பிக்கரிங் நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக மேற்படி இளைஞனை சந்தேக நபராக டர்ஹாம் பிராந்திய பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

ஒகஸ்ட் 16 ஆம் திகதி அதிகாலை 1.10 மணியளவில், லிவர்பூல் மற்றும் கிங்ஸ்டன் வீதிகளை சந்திக்கும் பகுதியில் உள்ள ஒரு வாகன நிறுத்துமிடத்தில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த அதிகாரிகள், துப்பாக்கிச் சூட்டால் காயமடைந்த 2 நபர்களை கண்டுபிடித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். எனினும் அவர்களின் நிலைமை குறித்து அதிகாரிகள் மேலதிக தகவல் வெளியிடவில்லை.

சம்பவம் தொடர்பாக நடத்திய விசாரணையின் அடிப்படையில் மகிபன் பேரின்பநாதன் என்பவர் தற்போது சந்தேக நபராக பொலிஸாரால் தேடப்பட்டு வருகிறார்.




# ஓரஞ்ச்விலில் இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் பலி

கனடாவின் ஓரஞ்ச்வில் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஏற்பட்ட வாகன விபத்தில் 75 வயது முதியவர் உயிரிழந்துள்ளார்.

அதிகாலை 3 மணியளவில் ஹைவே 10-ல், ஃபோர்த் அவென்யூ மற்றும் பிராட்வே ஸ்ட்ரீட் இடையில் இரண்டு பிக்கப் லொறிகள் மோதின என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் ஒரு வாகனத்தின் சாரதியான 75 வயது முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றொரு வாகன சாரதி சிறிய காயங்களுடன் தப்பினார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து விசாரணைக்காக பல மணி நேரம் சாலை மூடப்பட்டு, மீண்டும் திறக்கப்பட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்த முதியவரின் ஆள் அடையாள விபரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.



# கனடாவின் குடியிருப்பொன்றில் பாரிய தீ: 300 இற்கும் மேற்பட்டோர் வெளியேற்றம்

கனடாவின் நோவா ஸ்கோஷியா மிடில் சாக்வில்லில் உள்ள நான்கு மாடி குடியிருப்பு கட்டிடத்தில் ஏற்பட்ட பெரிய தீ விபத்தினால் நூற்றுக்கணக் கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

ஹாலிஃபாக்ஸ் பிராந்திய தீய ணைப்பு மற்றும் அவசர சேவை குழுவினர் திங்கட்கிழமை அதிகாலை 12.10 மணியளவில் ஹான்வெல் டிரைவ், எண் 119-இல் அமைந்த கட்ட டத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க முயன்றனர்.

தீ இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் மாடிகளை கடந்து கூரைக்கு பரவியிருந்தது எனவும் காற்று வேக மாக வீசியதால் தீ விரைவாக பரவி யது எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அனைவரும் பாதுகாப்பாக வெளி யேற்றப்பட்டனர் எனவும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் குறிப் பிட்டனர்.

ஹான்வெல் டிரைவ் 25 முதல் 119 வரையிலான வீடுகள் அனைத்தும் வெளியேற்றப் பகுதிக்குள் உள்ளதாக அறிவித்து மொத்தம் சுமார் 300 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

புகை பாதிப்புக்கு உள்ளானவர்கள் வீடுகளுக்குள் தங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

